வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ______ ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 11.05.2024 சனிக்கிழமை இதழ் : 132 பக்கங்கள் : 12

# தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் முடிவெடுக்க கூடுகிறது தமிழ் அரசு

## 19ஆம் திகதி மத்திய செயல்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், மே 11

**தமிழ் பொது வேட்பாளர் விவகாரத்தில் தனது நிலைப்பாட்டை எடுப்பதற்காக இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய செயல்குழு எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கூடவுள்ளது.**

வவுனியாவில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்து மத்திய செயல் குழுவிலுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாக கடந்த 4ஆம் திகதி சிவில் அமைப்புகளுக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையே சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இந்த சந்திப்பில் பங்கேற்ற தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமது கட்சியின் நிலைப்பாட்டை அறிவிப்பதற்கு இரண்டு வார காலஅவகாசத்தை கோரியிருந்தார். இதன் தொடர்ச்சியாகவே அவர், மத்திய செயல்குழுவை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலை பகிஷ்கரிப்பதாக அறிவித்துள்ளது. இந்த நிலையில், தமிழ் மக்களின் பெருவாரியான ஆதரவை பெற்றதும் - பழம் பெரும் கட்சியுமான இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாட்டுக்காக பல தரப்பினரும் காத்திருக்கின்றனர்.

ஏற்கனவே, அந்தக் கட்சியை 11

# பொலிஸார் விரட்டிச் சென்றவர் மின்கம்பத்துடன் மோதுண்டு பலி!

## புன்னாலைக்கட்டுவனில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், மே 11

வழிமறித்தும் நிற்காமல் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவரை பொலிஸார் விரட்டிச் சென்றபோது மின்கம்பத்துடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை இரவு புன்னாலைக்கட்டுவன் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையாக இடம்பெற்ற இந்த விபத்தில் கோப்பாய் தெற்கை சேர்ந்த பிரதீபன் (வயது 41) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

புன்னாலைக்கட்டுவனில் போக்குவரத்து கடமையில் இருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளில் வந்தவரை வழிமறித்துள்ளனர். ஆனால், அவர் பொலிஸாரின் கட்டளையை மீறி மோட்டார் சைக்கிளை வேகமாக செலுத்திச் சென்றுள்ளார்.

இதையடுத்து, பொலிஸார் 11

# ராஜபக்ஷக்கள் இல்லாமல் ஆட்சி அமையாது

## ஜோன்ஸ்டன்

கொழும்பு, மே 11

அறிவார்ந்தவர்கள் மக்கள் விடுதலை முன்னணிக்கு (ஜே. வி. பி.) வாக்களிக்களிக்க மாட்டார்கள். மக்கள் விடுதலை முன்னணியின் உண்மை முகம் தற்போது அவர்களின் பேச்சிலேயே வெளிப்படுகிறது. ராஜபக்ஷர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் 11 எவரும்

# முஜிபுர் மீண்டும் எம். பியாக பதவியேற்றார்



கொழும்பு, மே 11

ஒன்பதாவது பாரா ளுமன்றத்தின் உறுப்பினராக மீண்டும் மொஹமட் முஜிபுர் ரஹ்மான் நேற்று வெள்ளிக்கிழமை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சத்தியபிரமாணத்தின் பின்னர் பாராளு மன்ற செயலாளர் நாயகம் குஷானி 11

# பொதுஜன பெரமுன யாருடனும் இணையவும் பிரியவும் தயார்

## பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு

### ஜனாதிபதி வேட்பாளரை பெரமுன இன்னும் கண்டுபிடிக்கவில்லை

கொழும்பு, மே 11

நாட்டின் நலன் கருதி எதிர்வரும் தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுன எந்தவொரு தரப்பினருடன் இணையவும் பிரிந்து செல்லவும் தயாராக இருக்கிறது - என்று அந்தக் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் பிரசார பணிமனையைத் திறந்து வைக்கப்பட்டது. இதன் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனான (நேற்றுமுன்தினம்) சந்திப்பு குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பஸில், "வாராந்த கூட்டமே நடைபெற்றது. அவர்கள் குழுவொன்றை நியமித்துள்ளனர். நானும் அதில் பங்குபற்றினேன்"- என்றார்.

தொடர்ந்து, சிறீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராக உள்ளது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரைத்தான் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. ஜூன் 18ஆம் திகதிக்குள் தேர்தல் குறித்த தனது நிலைப் பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பார். இந்திய தேர்தல் முடிந்த பிறகு - சற்று முன்னதாகவோ இருக்கும் இது அமையும். பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்த தீர்மானத்தை 11

# சிறந்த ஆட்சி நிர்வாகத்தை உறுதி செய்வது அவசியம்

## மத்திய வங்கி ஆளுநருக்கு அமெரிக்க தூதுவர் வலியுறுத்தல்

கொழும்பு, மே 11

இலங்கையில் சிறந்த ஆட்சி நிர்வாகத்தையும், வெளிப்படைத் தன்மையையும் உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 80 ஆம் பிரிவின்படி 2023 ஆம் ஆண்டுக்கான பொருளாதார மீளாய்வு அறிக்கை மற்றும் 99 ஆம் பிரிவின்படி கடந்த ஆண்டுக்கான மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் என்பன அண்மையில் வெளியிடப்பட்டன.

இவ்வாறானதொரு பின்னணியில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க 11

# ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நீதிமன்ற தடையே காரணம்!

## கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு

கொழும்பு, மே 11

நீதிமன்ற தீர்ப்புகள் தடையாக அமையாவிட்டால் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்க முடியும் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். மேலும், நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களிலுமிருந்து 23 ஆயிரம் 11

# ரணிலின் வெற்றியை தமிழரின் வெற்றியாக மாற்ற வேண்டுமாம்

## டக்ளஸ் தேவானந்தா சொல்கிறார்

யாழ்ப்பாணம், மே 11

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஒப்பீட்டளவில் வல்லவராக தன்னை நிரூபித்துள்ள ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை தமிழ் மக்களின் வெற்றியாக மாற்ற வேண்டும் என்று கூறியுள்ளார் ஈ. பி. டி. பியின் பொதுச் செயலரும் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா

ஈ. பி. டி. பி. கட்சியின் தீவக அமைப்பாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தமிழ் மக்களின் பிரச்னைகளை தீராத பிரச்னையாக வைத்திருந்து அரசியல் 11

# வடக்கில் வெப்பநிலை உடலால் உணரப்படும் அளவை கடக்கும்

கொழும்பு, மே 11

வடக்கு மாகாணத்தில் வெப்பமான காலநிலை குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கும் வெப்பநிலை அதிகமாக இருக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

எனவே, குறித்த பகுதிகளில் வெப்பம், மனித உடலால் உணரப்படும் அளவுக்கு அதிகளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பிரதேசங்களில் வசிப்பவர்கள் அவதானமாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஒரு கிராமத்தில் ஒருவருக்கு ஒருவர் மற்றவர்களுடன் ஒத்துப்போகாத தந்தையும் மகனும் இருந்தனர். ஒருநாள் தந்தை விருந்துக்கு ஒருவரை அழைத்திருந்தார். எனவே, விருந்தினருக்கு சமைப்பதற்காக ஆட்டிறைச்சி வாங்குவதற்காக இறைச்சிக் கடைக்கு மகனை அருகிலுள்ள நகரத்துக்கு அனுப்பியிருந்தார் தந்தை.

இறைச்சியை வாங்கிக்கொண்டு நகரத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்த மகன் கிராமத்துக்குள் வரும்போது எதிரே ஒருவர் தன்னை நோக்கி நடந்து வருவதைக் கவனித்தான்.

அது ஒரு சிறிய வரம்பு. எதிரும்புதிருமாக வந்த அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, யாராவது ஒருவர் வரம்பிலிருந்து இறங்கி மற்றவருக்கு வழிவிட்டால் மாத்திரமே செல்லமுடியும்.

ஆனால், இருவருமே விட்டுக் கொடுப்பதாக இல்லை. அப்படியே நின்று கொண்டிருந்தனர்.

நீண்ட நேரமாகியும் திரும்பி வராத மகனைத் தேடித் தந்தை வந்தார். மகனை வரம்பில் கண்டார் தந்தை. கண்டதும் சொன்னார். "இறைச்சியை எடுத்துக் கொண்டு நீ வீட்டுக்குப் போய் விருந்தினரோடு இரு. உனக்குப் பதிலாக இந்த மனிதனை நான் இங்கு எதிர்த்து நிற்கிறேன்".

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது தொடர்பாக முடிவெடுப்பதற்காக எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயல்குழு கூடவிருக்கின்றது.

கடந்த நான்காம் திகதி சிவில் அமைப்புகள் அரசியல் கட்சித் தலைவர்கள் - பிரதிநிதிகளுக்கு இடையே நடைபெற்ற சந்திப்பில் தமது கட்சியின் முடிவை தெரிவிப்பதற்கு இரண்டு வார காலஅவகாசம் வழங்குமாறு அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் அரசின் தலைவர் மாவை சேனாதிராசா கோரிக்கை விடுத்திருந்தமை பற்றி ஏற்கனவே இந்தப் பத்தியில் எழுதியிருந்தோம்.

அவர் உறுதியளித்தவாறு, கட்சியின் முடிவை எடுப்பதற்காகவே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருப்பதாக நம்பப்படுகின்றது.

மே பதினெட்டாம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவுதினம் அனுஷ்டிக்கப்படவிருப்பதால், அதற்கு முன்னதாகவே ஒரு வாரத்துக்கு முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் தொடங்கிவிடும். அதனாலேயே அவற்றைத் தவிர்த்து மத்திய செயல்குழு கூட்டப்பட்டிருக்கின்றது. அந்தக் கூட்டத்தில் முடிவை எடுக்கிறார்களோ இல்லையோ, தலைவர் மாவை கூட்டத்தை கூட்டியிருப்பது கவனிக்கத்தக்கது. அந்த நான்காம் திகதி கூட்டத்தில் மாவை இரண்டு வார கால அவகாசம் கேட்டதும் - அதுபற்றி பின்னர் எழுதியவர்கள் மாவை கூட்டத்தைக் கூட்டவே போவதில்லை என்று ஆரூடம் தெரிவித்திருந்தனர். அவர்களின் ஆரூடத்தை மாவை இப்போது பொய்ப்பித்திருக்கிறார்.

இந்தக் கூட்டம் பற்றிய தகவலை தெரிவித்த தமிழ் அரசுக்காரரிடமே கேட்டேன், "நீங்களும் பகிஷ்கரிக்கும் முடிவை எடுக்கமாட்டீர்கள் என்பது தெரியும். ஆனால், பொதுவேட்பாளர் விடயத்தில் மத்திய செயல்குழு சாதகமான முடிவை எடுக்காவிட்டால், வேறு என்ன இருக்கின்றது? மூன்று சிங்கள வேட்பாளர்களில் ஒருவரை ஆதரிப்பது என்ற முடிவைத்தானே எடுக்க வேண்டும்?" என்று.

அவரே சொன்னார், "ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் அதிகாரம் இல்லாத பதின்மூன்றை அமுல்படுத்துவேன் என்கிறார். அதாவது, பதின்மூன்று மைனஸ். அநுர குமார அதுபற்றி நழுவில் பாணியிலேயே பதில் சொல்கிறார். ஆனால், சஜித் பிரேமதாஸ மட்டுமே பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவேன் என்கிறார். அப்படியெனில், சஜித்தைத் தானே ஆதரிக்க வேண்டியிருக்கும்" என்று.

பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று கூறும் சஜித் சொல்வதை செய்வாரா என்பது இருக்கட்டும் உங்கள் பெருந்தலைவர் சம்பந்தன் ஐயா பதின்மூன்றை ஏற்றுக்கொள்வாரா? என்று கேட்டேன். அவர் சொன்னார், "இருக்கின்ற மூவரில் யார் அதிகம் தருகிறார்கள் என்பதைப் பார்த்து அவரை ஆதரிக்கத்தானே வேண்டும்" என்றார். அதுவும் நியாயமானதுதான். ஆனால், கடந்த வருடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய போது அதன் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ கட்சி இந்தியப் பிரதமருக்கு பதின்மூன்றை வலியுறுத்தி கடிதம் எழுதுவதற்கான முயற்சி ஒன்றை எடுத்திருந்தது. அதன் முதலாவது கூட்டம் 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட்டில் நடந்தபோது அதில் மனோ கணேசனும், ரவூப் ஹக்கீமும் கூட கலந்துகொண்டனர். பின்னர் சம்பந்தனின் பங்குபற்றுதலுக்காக அடுத்த கூட்டம் கொழும்பில் நடைபெற்றபோது பதின்மூன்றை வலியுறுத்தி இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதுவதற்குக்கூட திட்டவட்டமாக மறுத்துவிட்ட சம்பந்தன், பின்னர் பலத்த சங்கடங்களுக்கு மத்தியில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்த வலியுறுத்தி எழுத சம்மதித்ததும் அதனால் அந்த முயற்சியில் இருந்து மனோ கணேசனும் ஹக்கீமும் விலகியமையும் பலருக்கும் மறந்துபோயிருக்கலாம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்று சம்பந்தன் வலியுறுத்தியமை அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்திருக்க வேண்டும் என்று இருந்ததால் என்று அப்போது விளக்கமும் தரப்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கு இணைப்பு சேர்க்கப்பட்டதாலேயே அதற்கு உடன்பாடு இல்லாத ஹக்கீம் அந்தக் கடிதத்தில் கையெழுத்திட மறுக்க வேண்டிவந்தது.

ஆனால், பதின்மூன்றை மாத்திரம் வலியுறுத்தி மோடிக்குக் கடிதம் எழுதவே மறுத்த சம்பந்தன் பின்னர் எப்படி பதின்மூன்றை அமுல்படுத்துவேன் என்று சொல்வதற்காக மாத்திரம் சஜித்தை ஆதரிக்க அனுமதிப்பார் என்று கேட்டதற்கு அந்தத் தமிழ் அரசு நண்பரிடம் பதில் இருக்கவில்லை.

அதிகம் ஏன், அவ்வாறு சம்பந்தனும் மற்றையவர்களும் கடிதம் எழுதியதால்தான் இந்தியா நமது பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் பதின்மூன்றோடு நிற்கின்றது. இல்லையெனில், அவர்கள் அதற்கு மேலேயும் போயிருப்பார்கள் என்று பின்னர் சொன்னவர் தமிழ் அரசின் மற்றுமோர் எம்.பி. சுமந்திரன்.

அப்படியொரு கடிதத்தை அன்று எழுதாமல் விட்டிருந்தால் (அதாவது, கடிதத்தில் சம்பந்தன் கையெழுத்து வைக்கக்கூடாது என்று விடாப்பிடியாக இருந்தவர் சுமந்திரன்) இந்தியா பதின்மூன்றுக்கு மேலே போயிருக்கும் என்று சொன்ன சுமந்திரன் இப்போது சஜித் பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று சொல்வதற்காக அவரை ஆதரிக்கும் முடிவுக்கு வருவார் என்று நான் நம்பவில்லை" என்றேன்.

அந்தத் தந்தையும் மகனும் விடாப்பிடியாக இறங்க மறுத்து வரம்பில் நின்றது போல நம்மவர்களும் தாம் நினைத்ததைத் தான் செய்வோம் என்று அடம்பிடிக்கப் போகிறார்களா அல்லது விட்டுக்கொடுத்து மற்றவர்களின் விருப்பங்களையும் உள்வாங்கி முடிவெடுக்கப் போகின்றார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.!

ஊர்க்குருவி

## சட்டத்தை தமது கையில் எடுக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை

### யுக்தியவுக்கு ஆளும் தரப்பு எம். பி. எதிர்ப்பு



கொழும்பு, மே 11

சட்டத்தைச் செயல்படுத்துவதாகக் கூறிக்கொண்டு, சட்டத்தை பொலிஸாரால் தமது கையில் எடுக்க முடியாது. ஒரு சில பொலிஸாரின் செயல்பாடுகளால் தான் சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸாரை எதிர்க்கிறது என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்தே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமர்வில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் யுக்திய சுற்றிவளைப்பு சிறந்ததாகக் காணப்பட்டாலும், ஒருசில குறைபாடுகளும் உள்ளன.

யுக்திய சுற்றிவளைப்பை முன்னிலைப்படுத்தி ஒரு சில பொலிஸார் முறையற்ற வகையில் செயல்படுகின்றனர். கொழும்பில் இவ்வாறான நிலை காணப்படுகிறது.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு சட்டத்தை பொலிஸார் கையில் எடுக்க முடியாது. பொலிஸார் தமது வரையறைக்கு அப்பாற்பட்டுச் செயல்படும் போது பெரும் பிரச்னைகள் ஏற்படும். இவ்வாறான காரணங்களால் தான் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸாரின் செயல்பாடுகளை விமர்சிக்கிறது.

ஒருசில பொலிஸாரின் முறையற்ற செயல்பாடுகள் பால் குடத்தில் ஒரு துளி விசம் கலந்தது போல் மாறி விடுகிறது. ஆகவே யுக்திய சுற்றிவளைப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு முறையற்ற வகையில் செயல்படும் பொலிஸார் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும், பொலிஸ்மா அதிபரும் விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (எ)

## பஸ் - ஓட்டோ விபத்தில் வயோதிபர் உயிரிழப்பு

நால்வர் படுகாயம்



பதுளை, மே 11

பதுளை - மஹியங்கனை வீதியில் புவக்கொடமுல்ல பிரதேசத்தில் இ. போ. ச. பஸ் - ஓட்டோவுடன் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் நால்வர் படுகாயமடைந்ததாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தெஹியத்தகண்டியவிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த இ. போ.ச. பஸ் ஒன்று பதுளையிலிருந்து ரிதிபனை நோக்கிப் பயணித்த ஓட்டோவுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது ஓட்டோவில் பயணித்த 79 வயது வயோதிபர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இந்த விபத்தின் போது பெண்ணொருவரும் மூன்று நபர்களும் காயமடைந்த நிலையில் பதுளை போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பஸ் சாரதி கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

விபத்து சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## துப்பாக்கியை காண்பித்து நகைக் கடையில் கொள்ளை

ஹோமாகம, மே 11

ஹோமாகம நகரத்திலுள்ள நகைக் கடைக்குள் நுழைந்த நால்வர் அங்கிருந்த பணியாளர்களிடம் துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தி 3 இலட்சம் ரூபாய் பணம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றதாக ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. இதன்போது, நகைக் கடையிலிருந்த 36 மோதிரங்களும் 8 பென்டன்களும் கொள்ளையிடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், கொள்ளையர்கள் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள்களில் போலி இலக்கத்தகடுகள் பொருத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
11.05.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இணக்க அரசியலும் தோல்விதானே!

ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை தமிழ் மக்களின் வெற்றியாக மாற்ற வேண்டுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கின்றார். அத்துடன், தோல்வியடைந்த வழிமுறைகளை மீண்டும் கைக்கொள்வதால் பயனில்லை என்றும் அறிவுரை கூறியிருக்கின்றார். தோற்றுப்போன வழிமுறைகளை மீண்டும் கைக்கொள்வதில் பயனில்லை என்பதை ஏற்றுக்கொள்ளலாம் - அதில் தவறில்லை. ஆனால், ஏனைய அரசியல் தரப்புகளின் வழிமுறைகளை தோற்றுப் போனவையாகக் குறிப்பிடும் டக்ளஸ் தேவானந்தா இதுவரையில் கையாண்ட வெற்றிகரமான வழிமுறை என்ன என்பதையும் மக்களுக்கு கூற வேண்டுமல்லவா.

டகளஸ் தேவானந்தா தொடர்த்தும் அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை பயன்படுத்துவது தொடர்பில் பேசிவருகின்றார். "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி", என்னும் சுலோகத்தையும் பல தசாப்தங்களாக உச்சரித்து வருகின்றார். அரசமைப்பில் உள்ளவற்றை அமுல்படுத்த வேண்டும் என்று கூறுவது சரியானது. ஆனால், அரசாங்கங்களோடு இணைந்து - டக்ளஸின் வார்த்தையில் கூறுவதனால் "இணக்க அரசியல்" வழிமுறையின் ஊடாகவும் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் டக்ளஸ் தேவானந்தாவால் வெற்றிபெற முடியவில்லையே? -அப்படியாயின், டக்ளஸ் தேவானந்தாவும் ஏனைய அரசியல்வாதிகளைப் போன்று தோற்றுப்போன ஒருவர்தானே!

டக்ளஸ் தேவானந்தாவும் இலங்கை அரசின் அடக்குமுறைகளை எதிர்த்து போராடப் புறப்பட்ட ஒருவர்தான். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ்) இராணுவ பொறுப்பாளராக இருந்தவர். பிற்காலங்களில் ஏற்பட்ட சகோதர மோதல்கள் மற்றும் உள்முரண்பாடுகளால் ஆயுதப் போராட்டத்திலிருந்து வெளியேறியவர். தென்னிலங்கை ஆட்சியாளர்களுடன் இணங்கிச் செல்வதன் ஊடாக மக்களின் உரிமைகளை நிலைநாட்ட முடியுமென்னும் நம்பிக்கையுடன் பயணித்து வருகின்றார். ரணசிங்க பிரேமதாஸ காலத்திலிருந்து அவரின் பயணம் தொடர்கின்றது.

அரசாங்கத்துடன் இணங்கிச் செல்லும் அரசியல் அணுகுமுறையில் டக்ளஸிடம் போலித்தனம் இல்லை. 1990களிலிருந்து ஒரே பாதையிலேயே பயணம் செய்து கொண்டிருக்கின்றார். ஆனால், அவரின் அணுகுமுறை ஊடாகவும் அவரால் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளை வெற்றிகொள்ளும் பயணத்தில் சிறிய பங்களிப்பைக்கூட வழங்க முடிந்ததா - என்னும் கேள்விக்கு அவரே பதிலைத் தேட வேண்டும்.

அரசாங்கங்களோடு இணைந்திருந்தன் மூலம் அமைச்சு பொறுப்புகளை பெறமுடிந்ததே தவிர, மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் ஆட்சியாளர்களை வளைக்கும் முயற்சியில் டக்ளஸின் இணக்க அரசியலும் கைகொடுக்கவில்லை. அவர் கூறிவரும் 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தில்கூட முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. மாகாண சபை தேர்தலை தொடர்ந்தும் அரசாங்கம் பிற்போட்டு வருகின்றது. மாகாண சபைத் தேர்தலை வைக்க வேண்டுமென்று ஆணித்தரமாகக்கூறும் நிலையிலும் அவர் இல்லை. அவ்வாறாயின், இணக்க அரசியலில் பெறுமதி என்ன என்னும் கேள்வி அல்லவா எழுகின்றது. எதிர்ப்பு அரசியல் அணுகுமுறைகள் தோல்வியுற்றிருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், இதேபோன்று, இணக்க அரசியல் முயற்சிகளும் தோல்வியடைந்திருக்கின்றன என்னும் யதார்த்தத்தையும் அல்லவா ஏற்றுக்கொள்ள வேண்டும். இரண்டு அணுகுமுறைகளின் தோல்விகளிலிருந்தும் பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு இரண்டு தரப்புகளுக்கும் அல்லவா இருக்கின்றது.



'DIGIECON உலகளாவிய முதலீட்டு மாநாடு'

# தகவல் தொழில்நுட்ப துறைசார் இளையோருக்கு சிறந்த வாய்ப்பு

கொழும்பு, மே 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் DIGIECON- 2023 திட்டத்துடன் இணைந்து நடத்தப்படும் ஞஐபுஐநுஊழுே உலகளாவிய முதலீட்டு உச்சி மாநாடு - 2024 (DIGIECON Global Investment Summit) என்பது இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கு ஒரு சிறப்பான வாய்ப்பாகும் என்று தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டின் மூலம் பல வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்கு பெற்றுக் கொள்ள முடியும் எனவும், இதன் மூலம் தகவல் தொழில்நுட்பத் துறையின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு உயர் பங்களிப்பை வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

டிஜிற்றல் பொருளாதாரத்தை உருவாக்கும் 'DIGIECON 2023' திட்டத்துடன் இணைந்ததாக இலங்கை தொழில்நுட்ப அமைச்சால் நடத்தப்படும் DIGIECON உலகளாவிய முதலீட்டு மாநாடு குறித்து தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

'DIGIECON-2023' திட்டத்துடன் இணைந்ததாக நடைபெறவுள்ள DIGIECON உலகளாவிய முதலீட்டு மாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் கொழும்பில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு டிஜிற்றல் முதலீட்டு மாநாட்டை நடத்துவதன் மூலம் இலங்கையில் டிஜிற்றல் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள DIGIECON திட்டத்தை மேலும் விரிவுபடுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இதன் மூலம் தகவல் தொழிநுட்பத் துறையில் ஈடுபட்டுள்ள இளைஞர்களும் பாடசாலை மாணவர்களும் தமது துறையில் முன்னேற சிறந்த வாய்ப்பு உள்ளது.

இந்த மாநாட்டின் மூலம் இலங்கையை சர்வதேச ரீதியில் கொண்டு செல்ல எதிர்பார்க்கிறோம். இதன்படி சர்வதேச சமூகம் இந்நாட்டில் முதலீடு செய்ய வாய்ப்பு கிடைக்கும். இத்திட்டங்கள் மூலம் நமது நாட்டில் உள்ள விசேட திறமை கொண்ட இளைஞர்களுக்கு சிறந்த வாய்ப்பு கிடைக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடைந்து பணவீக்கம் குறைந்துள்ளது. இதன்படி, இந்நாட்டில் முதலீடுகளுக்கு சிறந்த பின்னணி உருவாகியுள்ளது. எனவே, இந்த மாநாட்டின் மூலம் பல வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கும். இது நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்தும்" என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (எ)

# பூச்சி இனங்களை கடத்த முயன்ற இத்தாலியர் கைது!

கொழும்பு, மே 11

யால தேசிய பூங்காவில் இருந்து சேகரித்த நூற்றுக்கணக்கான உள்ளூர் பூச்சி மற்றும் தாவர இனங்களை வெளிநாட்டுக்கு கடத்த முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் இத்தாலி பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கடகமுவ வனவிலங்கு பாதுகாப்பு பணிமனை அதிகாரிகள் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இலங்கைக்கே உரிய வண்ணத்துப்பூச்சிகள் உட்பட 285 பூச்சிகளை சேகரித்து வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 11 சனிக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 28
நல்ல நேரம் : 07.30 - 08.30
ராகு காலம் : 09.30 - 10.30
திதி : திரிதியை




**மேடம்**
குடும்பத்தினரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். இனிமையான நாள்.

**சிம்மம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதாக திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியா பாரத்தில் வேலையாட்கள் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். தாய் வழியில் ஆதரவுப் பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**தனுசு**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி காரியம் சாதிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். அமோகமான நாள்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் இருந்த பிரச்னைகள் விலகும். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

### மோடியை எதிர்த்து போட்டி

# திடீரென இரத்தான முன்பதிவுகளால் போராட்டத்தில் குதித்த விவசாயிகள்



தஞ்சாவூர், மே 11

விவசாயிகளின் முன்பதிவுகள் திடீரென இரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதால் தஞ்சாவூரில் விவசாயிகள் ரயிலின் அபாயச் சங்கிலியை இழுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாரணாசி தொகுதியில் போட்டியிடும் பிரதமர் நரேந்திர மோடியை எதிர்த்து விவசாயிகள் சார்பில் 111 பேர் போட்டியிடுவதற்காக வாரணாசிக்கு நேற்றுக்காலை ரயிலில் செல்லத் திட்டமிட்டிருந்தனர்.

இதற்காக தேசிய - தென்னிந்திய நதிகள் இணைப்பு சங்கத்தின் தலைவர் ஐயாக்கண்ணு தலைமையில் திருச்சியிலிருந்து வாரணாசிக்கு செல்ல ரயிலில் முன்பதிவு செய்திருந்தனர்.

இதன்படி நேற்றுக் காலை திருச்சி ரயில் நிலையத்துக்கு வந்த ஐயாக்கண்ணு தலைமையிலான 39 விவசாயிகள் முன்பதிவு செய்த பெட்டியில் ஏறினர். மீதமுள்ள விவசாயிகள் ஆங்காங்கே இந்த ரயிலில் பல இடங்களிலிருந்து பயணம் செய்யத் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால், ரயில்வே ஊழியர்கள் விவசாயிகளின் முன்பதிவு இரத்துச் செய்யப்பட்டதாகக் கூறினர். இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள் தஞ்சாவூர் ரயில் நிலையத்துக்கு வந்து ரயில் புறப்படவிருந்த நேரத்தில் ரயிலின் அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் ரயில்வே அதிகாரிகள், பொலிஸார் விவசாயிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டனர். அப்போது முன்பதிவுகள் அனைத்தும் உறுதி செய்யப்பட்ட நிலையில், திடீரென இரத்துச் செய்யப்பட்டது ஏன் என விவசாயிகள் கேள்வி எழுப்பினர். அப்போது ரயில்வே அதிகாரிகள், மீண்டும் விழுப்புரத்தில் தனிப் பெட்டியை இந்த ரயிலில் இணைத்து விவசாயிகள் தொடர்ந்து பயணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர். இதைடுத்து விவசாயிகள் போராட்டத்தை கைவிட்டு அதே ரயிலில் ஏறிச் சென்றனர். (எ)

# தனது பிறந்த நாளையொட்டி கட்சியின் முதல் மாநாட்டை நடத்த விஜய் திட்டம்



சென்னை, மே 11

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு குறித்த தகவல் வெளியாகியுள்ளது. நடிகர் விஜய் கடந்த பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி "தமிழக வெற்றிக் கழகம்" என்ற கட்சியைத் தொடங்கினார்.

தேர்தல் ஆணைக்குழு அந்தக் கட்சிக்கு அங்கீகாரம் வழங்கியதும் கட்சியின் கொடி, சின்னம் அறிவிக்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார். தேர்தல் ஆணைக்குழுவில் தனது கட்சியைப் பதிவு செய்துள்ள விஜய் வரும் 2026 சட்டமன்றத் தேர்தல்தான் இலக்கு எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மக்களவைத் தேர்தலில், தான் போட்டியிடப் போவதில்லை எனவும் யாருக்கும் ஆதரவு கொடுக்க மாட்டோம் எனவும் கூறினார். இடைப்பட்ட இந்த 2 வருடங்களில் கட்சியைப் பலப்படுத்தும் பணிகளில் ஈடுபடப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு குறித்த தகவல் வெளியாகியுள்ளது. நடிகர் விஜய் அடுத்த மாதம் 22 ஆம் திகதி தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். பிறந்த நாளையொட்டி மதுரையில் தனது கட்சி சார்பில் முதல் பிரமாண்டமான மாநாடு நடத்த விஜய் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த மாநாட்டுக்கு தமிழகம் முழுவதிலும் இருந்து விஜய்யின் ஒட்டு மொத்த இரசிகர்களும் திரண்டு வந்து கலந்து கொள்ள இருப்பதாகவும் தெரிய வருகிறது. (எ)

## முதலமைச்சருக்கு தைரியம் இருக்கிறதா?

### நடிகை குஷ்பு கேள்வி



சென்னை, மே 11


காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி ஏன் அமேதியில் போட்டியிடாமல் ரேபரேலியில் போட்டியிடுகிறார்? என்று நடிகை குஷ்பு கேள்வி எழுப்பியுள்ளார்.

"தமிழினப் பெருமைகளைக் காக்க காங்கிரஸுடனான உறவுகளை முறித்துக் கொள்வாரா? என்று பிரதமர் மோடி விட்ட சவாலுக்குப் பதிலளிக்க தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு தைரியம் இருக்கிறதா?. இந்தியா கூட்டணியில் ராகுல் காந்தி தான் வெற்றி பெற்று பிரதமராக வருவார் என்று சொல்லக் கூடியவர்கள் தமிழகத்தில் ஏன் காங்கிரஸால் தனியாக நிற்க முடியவில்லை என்பதற்கு பதில் கூற முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய மகளிர் ஆணைக்குழு உறுப்பினர் குஷ்பு சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

ராகுல் காந்தி ஏன் அமேதியில் போட்டியிடாமல் ரேபரேலியில் நிற்கிறார்?. பிரியங்கா காந்தி ஏன் தேர்தலில் களம் இறங்கவில்லை?. 3 ஆண்டு கால தி. மு. க. ஆட்சியில் கொண்டாட ஒன்றுமே இல்லை- இவ்வாறு அவர் கூறினார் குஷ்பு. (எ)

## பட்டாசு ஆலையில் பயங்கர விபத்து! 10 தொழிலாளர்கள் பரிதாபமாக பலி



சிவகாசி, மே 11

சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 6 பெண்கள் உட்பட 10 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். மேலும் காயமடைந்த 14 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நிறுவனத்துக்கு காணி; வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது

## மன்னார் - பாவிலான்பாட்டன் மக்கள் சாடல்

மன்னார், மே 11

**மன்னாரில் 160 ஏக்கர் காணி இந்திய நிறுவனம் ஒன்றுக்கு கனிய மணல் அகழ்வுக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் இதனால் பல குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை உள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, நடுக்குடா பாவிலான்பாட்டன் குடியிருப்பு பகுதியில் உள்ள காணியே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், விற்பனை செய்யப்பட்ட காணியில் நூற்றுக்கணக்கான பனை மரங்கள் உள்ளன. அவற்றை அழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இதனை தடுத்து நிறுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தக் காணியை வாங்கிய நிறுவனம் தமது பூர்வீக காணிகளை அத்துமீறி பிடித்து வருவதாவும், பனை மரங்கள் அழிக்கப்படுவதால் தமது வாழ்வாதாரம் இழக்கப்படுவதாகவும் பாவிலான்பாட்டன் குடியிருப்பு மக்கள் தெரிவித்தனர்.



இதேநேரம், காணிகளை ஆக்கிரமித்து சுற்றுவேலி அமைக்கும் நடவடிக்கையை தடுக்க முயன்றவர்களை பொலிஸார் அச்சுறுத்துகின்றனர் என்றும் இது தொடர்பில் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த போதிலும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் மக்கள் மேலும் கூறினர்.

எனவே உரிய உயர் அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு தமக்கு நீதி பெற்றுத் தருமாறு மக்கள் கோரியுள்ளனர். (ஐ)



படம் :ஐ.சிவசாந்தன்

## சிவனொளிபாத மலைக்கு தல யாத்திரை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 11

நல்லூரில் இருந்து சிவனொளிபாதமலைக்கு மூன்று நாள் தல யாத்திரை நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

யாத்திரை குழுவினர் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்று வழிபட்ட பின்னர் யாத்திரையை ஆரம்பித்தனர்.

இலங்கை முதலுதவி சங்க இந்து சமயத் தொண்டர் சபையும் மலையக இந்து குருமார் ஒன்றியமும் இணைந்து யாத்திரையை ஏற்பாடு செய்திருந்தன.

## சிகரெட்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மே 11

1,180 வெளிநாட்டு சிகரெட்களை இலங்கைக்கு கொண்டு வந்தவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

அம்பலாந்தோட்டை பொலிஸ் பிரிவில் நடத்தப்பட்ட விசேட நடவடிக்கையிலேயே இவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் அதே இடத்தை சேர்ந்த 43 வயது நபராவார். (ஐ)

## சந்தையில் வெற்றிலை மென்றபடி வியாபாரம் செய்தோருக்கு வழக்கு

தென்மராட்சி, மே 11

வெற்றிலை மென்றவாறு வியாபாரத்தில் ஈடுபட்ட சாவகச்சேரி பொது சந்தையின் வியாபாரிகள் ஐவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொது சுகாதார பரிசோதகர்கள் குழு முன்னெடுத்த திடீர் சோதனையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன், பழுதடைந்த மரக்கறிகளும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. (ஐ)

## கந்தர்மடத்தில் சிக்கியது விபசார நிலையம்!

### 2 பெண்கள் உட்பட நால்வர் கைது

யாழ்ப்பாணம், மே 11

விபசார நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு இரு பெண்கள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிசாந்தவின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து கந்தர்மடத்தில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்த சம்பவத்தில், பருத்தித்துறை, நீர்வேலி சேர்ந்த பெண்கள் இருவரும் ஆண் ஒருவரும் வீட்டின் உரிமையாளரான முதியவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## மூதாட்டியிடம் கைபேசி பறித்த மூவருக்கு ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம், மே 11

மூதாட்டி ஒருவரிடம் கைபேசியை பறித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவருக்கு நீதிமன்றத்தால் ஆறு மாதகால சிறைத்தண்டனை விதித்ததோடு அதனை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்துள்ளது.

பருத்தித்துறை - தும்பளை பகுதியில் பழைய பொருட்கள் சேகரிக்க வாகனம் ஒன்றில் சென்ற மூவர் வீட்டில் தனித்திருந்த மூதாட்டியின் கைபேசியை பறித்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கடந்த வருடம் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் மூவரையும் மன்று குற்றவாளியாகக்கண்டு மூவருக்கும் தலா 6 மாத கால சிறைத்தண்டனை விதித்து அதனை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்துள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மூதாட்டிக்கு குற்றவாளிகளான மூவரும் தலா 50 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

## கஞ்சா செடி வளர்த்தவர் கைதானார்!



யாழ்ப்பாணம், மே 11

சுன்னாகத்தில் கஞ்சா செடி வளர்த்த ஒருவரை பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விசாந்த தலைமையிலான பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடைபெற்றது.

இதன்போது? 8 அடி உயிரமான கஞ்சா செடி ஒன்று கைப்பற்றப்பட்டது. (ஐ)

## போதை மாத்திரைகளுடன் கோப்பாயில் இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 11

கோப்பாயில் 200 போதை மாத்திரைகளை விற்பனை செய்த இருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையிலேயே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து விற்பனை செய்வதற்காக வைத்திருந்த 200 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டன.

உரும்பிராய் - செல்வபுரத்தை சேர்ந்த 19 வயது, கோண்டாவிலை சேர்ந்த 28 வயது இளைஞர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த கோப்பாய் பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பெண் பொலிஸை வன்புணர முயன்ற மாங்குளம் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, மே 11

பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை வன்புணர முயன்றார் என்ற குற்றத்தின்பேரில், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மாங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், மாங்குளம் பொலிஸ் விசேட அதிரடிப் படை பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புக் கரையோர பொலிஸாரின் மகளிர் பயிற்சி படை முகாமுக்குள் நேற்று அதிகாலை அத்துமீறி நுழைந்த கான்ஸ்டபிள், அங்கு உறங்கிக் கொண்டிருந்த பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை வன்புணர முயன்றார் என்று விசாரணையில் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## வடமராட்சி விபத்தில் இளம்பெண் படுகாயம்!

வடமராட்சி, மே 11

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் இளம் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை- மருதங்கேணி வீதியில் குடத்தனை - வலிக்கண்டி பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், 27 வயதான பெண் ஒருவரே படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க

# அதிநவீன தேர்தல் பணிமனையை நேற்று திறந்தது பொதுஜன பெரமுன!

கொழும்பு, மே 11

**நடைபெறவுள்ள தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பதற்காக சிறீ லங்கா பொதுஜன பெரமுன பத்தரமுல்லை நெலும் மாவத்தை ஜெயந்திபுரவில் அதிநவீன தேர்தல் பணிமனையை நேற்று திறந்து வைத்துள்ளது.**



முன்னாள் சபாநாயகரும் பாராளுமன்ற உறுப்பினருமான சமல் ராஜபக்ஷ நேற்றைய தினம் இந்தப் பணிமனையை திறந்து வைத்தார்.

தொகுதிகள் மட்டத்திலும் ஜனாதிபதி தேர்தல் செயல்பாட்டு பணிமனைகள் திறக்கப்படும் என சிறீ லங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பரந்த பிரசாரப் பொறிமுறை தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த கட்சி அறிவித்துள்ளது.

பணிமனை திறப்பு விழாவில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட பெருந்திரளானவர்கள் பங்கேற்றனர்.

இதேவேளை, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை கீழ் மட்டத்திலிருந்து பலப்படுத்தும் புதிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உர மானியத்தை அதிகரிக்க முடிவு

விவசாய அமைச்சர்

கொழும்பு, மே 11

தேயிலைத் தோட்டங்களுக்கு தற்போது வழங்கப்படும் உர மானியத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, குறித்த உர மானியத்தை 10 ஏக்கரில் இருந்து 50 ஏக்கர் வரை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சில் நேற்று முன்தினம் நடந்த கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தேயிலை உற்பத்தியாளர்கள் சங்கம், இலங்கை தேயிலை சபையின் அதிகாரிகள் உள்ளிட்டோர் குறித்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

இதுவரை 10 ஏக்கருக்கு மாத்திரமே குறித்த உர மானியம் வழங்கப்பட்டு வந்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் அதனை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் கூறினார். (ஐ)

## காணாமல் போனவர் சடலமாக மீட்பு

கொழும்பு, மே 11

காணாமல்போன பெண் ஒருவரின் சடலம் வனப்பகுதியில் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

65 வயதுடைய பெண்ணொருவரின் சடலம் இவ்வாறு மீட்கப்பட்டது.

கண்டி - கம்பளை - படிதலாவை என்ற இடத்தை சேர்ந்த பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். (ஐ)

# பரீட்சை எழுதிய மாணவனை தாக்கிய இருவர் கைதாகினர்

கொழும்பு, மே 11

பரீட்சை மண்டபத்திற்குள் அத்துமீறி நுழைந்து சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி - ரத்கம பிரதேச பாடசாலை ஒன்றின் பரீட்சை நிலையத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலை நடத்தியவர்கள் அதே பாடசாலையில் கல்விகற்கும் உயர்தர வகுப்பு மாணவர்கள் என்று தெரிய வருகின்றது.

நேற்று முன்தினம் நடந்த இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவன் தலையில் காயமடைந்தார். எனினும், அவர் தொடர்ந்து பரீட்சையை எழுதினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கிய மாணவர்களுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. (ஐ)

# டயானா கமகேயின் மனுவை விசாரிக்க உயர்நீதிமன்று முடிவு

கொழும்பு, மே 11

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவை ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்யக்கோரி அவர் தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 28ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு நேற்று காமினி அமரசேகர, குமுதுனி விக்கிரமசிங்க, மகிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, டயானா கமகே சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, இந்த மனு தொடர்பான தீர்மானத்தை அறிவிப்பதற்கு திகதி வழங்குமாறு கோரினார்.

இதன்படி, சம்பந்தப்பட்ட மனுவை இம்மாதம் 28ஆம் திகதிக்கு விசாரணைக்கு எடுப்பதற்கு தீர்மானித்தது. அத்துடன், அன்றைய தினம் இந்த மனுவை பராமரிப்பது தொடர்பான முடிவை அறிவிக்குமாறு மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, பொதுச் செயலாளர் ரஞ்சித் பதும பண்டார உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர். (ஐ)

# அரிசி வழங்கல் முறைப்பாடுகளை விசாரணை நடத்துமாறு பணிப்புரை

கொழும்பு, மே 11

தேசிய அரிசி வழங்கல் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 10 கிலோ அரிசி தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் மாவட்ட அரச அதிபர்களை விசாரணை செய்யுமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடு முழுவதும் 24 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 கிலோ அரிசி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புக்கு அமைய இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த அரிசி விநியோகம் தொடர்பில் பல குற்றச்சாட்டுகள் வெளியாகியுள்ளன. இந்த நிலையிலேயே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சட்டவிரோதமாக உற்பத்தி 1625 கிலோ லஞ்ச்சீற் பறிமுதல்!

கொழும்பு, மே 11

சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட 1,625 கிலோ லஞ்ச்சீற்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு - கெஸ்பேவ - கஹாபொல பிரதேசத்திலுள்ள தொழிற்சாலையொன்றில் இந்த லஞ்ச்சீற்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த லஞ்ச்சீற்கள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன், சட்டவிரோதமாக லஞ்ச்சீற்களை தயாரித்த தொழிற்சாலை உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க 10 இலட்சம் பேர் புதிதாக தகுதி!

கொழும்பு, மே 11

18 வயதை பூர்த்தி செய்த 10 இலட்சம் பேர் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க புதிதாக தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை 2024ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதி தேர்தலில் சுமார் ஒரு கோடியே 70 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission

இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# கிறிப்டோ கரன்சியை பயன்படுத்துவது ஆபத்து

மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, மே 11

நாட்டில் கிறிப்டோ கரன்சி எனப்படும் எண்ணிம நாணய அலகு சட்ட ரீதியானதல்ல. அதனை பயன்படுத்துவதில் ஆபத்து உள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நலந்தலால் வீரசிங்க அறிவித்துள்ளார்.

நாட்டில் கிறிப்டோ நாணயம் வெகுவாக பயன்படுத்தப்படுவதில்லை. இந்த நாணய அலகு பயன்பாட்டில் ஆபத்து காணப்படுகிறது.

கிறிப்டோ நாணயங்களில் முதலீடு செய்த சிலர் நட்டமடைந்துள்ளனர். இவ்வாறான முதலீடுகளின் மூலம் சிலர் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, நாட்டில் கிறிப்டோ நாணய அலகினை பயன்படுத்துவது குறித்து மத்திய வங்கி தொடர்ந்தும் ஆராய்ந்து வருவதாகவும் ஆளுநர் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு கொண்டாட்டத்தில் மதுபான பாவனையில் வீழ்ச்சி!

கொழும்பு, மே 11

**கடந்த வருடத்தை காட்டிலும் இந்த வருடத்தின் தமிழ், சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டத்தின்போது மதுபான பாவனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.**

மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட ஆய்வொன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

குறித்த ஆய்வுக்காக நாடளாவிய ரீதியில் 415 பேரிடம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இவர்களில் 192 பெண்களும் அடங்குவர் என்று மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பெறப்பட்ட தகவல்களின்படி இந்த ஆண்டு புத்தாண்டுக் கொண்டாட்டக் காலங்களில் மதுபான பாவனை குறைவடைந்துள்ளதாக 64.4 சதவீதமானோர் தெரிவித்துள்ளனர்.

இதில் 26 சதவீதத்தினர் இந்த காலகட்டத்தில் மதுபான பாவனையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை எனவும் 10 சதவீதத்தினர் மதுபான பாவனை அதிகரித்திருந்ததாகவும் தகவல் வழங்கியுள்ளனர்.

புதுவருட கொண்டாட்டத்தில் மதுபான பாவனை குறைவடைந்தமைக்கான காரணங்கள் தொடர்பான கருத்துகளுக்கு மதுபானத்தின் விலை அதிகரிப்பே காரணம் என ஆய்வில் பங்கேற்ற 71.5 சதவீதமானோர் தெரிவித்துள்ளனர்.

இது சமூகத்தில் சிறந்த போக்கை எடுத்துக்காட்டுவதாகவும், சுகாதாரத்துறையின் அதிக செலவினத்தை தவிர்க்க முடியும் எனவும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ)

# சஜித் அணியிலிருந்து 16 பேர் ரணில் பக்கம்!

## வெகுவிரைவில் நடக்குமாம்

கொழும்பு, மே 11

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அணியிலிருந்து 16 பேர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் வெகுவிரைவில் இணையப் போகின்றனர் என்று தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி தேர்தல் நெருங்கி வரும் காலப்பகுதியில் பல கட்சி தாவல்கள் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்று அரசியல் ஆய்வாளர்கள் முன்னரே வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறான சூழலில் தேசிய மக்கள் சக்தியின் முதன்மையான அரசியல் பிரமுகர்கள் சிலரும் கட்சி தாவுவர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால், இந்த தகவல்கள் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் மிகவும் இரகசியமாக ரணிலின் நம்பிக்கைக்குரிய ஒருவரின் தலைமையில் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இரத்தினபுரியில் தோட்ட அதிகாரிகளின் அடாவடி குறித்து நடவடிக்கை எடுங்கள்!

## பொலிஸ் மா அதிபரிடம் ஜீவன் கோரிக்கை



கொழும்பு, மே 11

இரத்தினபுரி பகுதியில் தொடரும் தோட்ட அதிகாரிகளின் அடாவடித்தனம் தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபரை அமைச்சர் ஜீவன் தொண்டமான் கேட்டுள்ளார்.

இரத்தினபுரி தும்பறை 82 ஆம் பிரிவில் உள்ள தோட்ட அதிகாரி மற்றும் காவலாளி இணைந்து தோட்ட தொழிலாளர்களை தாக்கிய சம்பவம் தொடர்பிலேயே இந்த கோரிக்கையை பொலிஸ் மா அதிபருக்கு அமைச்சர் விடுத்துள்ளார்.

இரத்தினபுரி தும்பறை 82 ஆம் பிரிவில் உள்ள தொழிலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்தியமாகாண சபை உறுப்பினருமான ஏ. பி.சக்திவேல் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் சின்னையா இராஜமணி ஆகியோர் தாக்குதலுக்கு உள்ளான தொழிலாளர்களை நேரடியாக சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

மேலும், தாக்குதலுக்கு உள்ளான இரு தொழிலாளிகளம் பொலிஸாரின் பாதுகாப்போடு பலத்த காயங்களோடு இரத்தினபுரி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை தாக்குதல் நடத்திய தோட்ட அதிகாரிகளை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 5 மாதங்களில் மட்டும் 27 பேர் சுட்டுக் கொலை!

## 42 துப்பாக்கி சூட்டு சம்பவங்கள்

கொழும்பு, மே 11

இந்த வருடத்தில் மே 9ஆம் திகதி காலை வரையான காலப் பகுதியில் 42 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகின. இவற்றில் 27 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் பெரும்பாலானவை பாதாள உலக குழுக்களுக்கு இடையிலான முரண்பாடுகளால் ஏற்பட்டவை என்றும் அவர் கூறினார்.

அத்துடன், 12 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் எந்தப் பாதிப்புகளும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இந்த வருடத்தில் மே 9ஆம் திகதி காலை வரையான காலப் பகுதியில் 42 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகின. இவற்றில் 27 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் பெரும்பாலானவை பாதாள உலக குழுக்களுக்கு இடையிலான முரண்பாடுகளால் ஏற்பட்டவை என்றும் அவர் கூறினார்.

அத்துடன், 12 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் எந்தப் பாதிப்புகளும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஜனாதிபதி - பஸில் மீண்டும் சந்திப்பு!

கொழும்பு, மே 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன்தினம் மற்றுமொரு கலந்துரையாடல் நடைபெற்றது.

வரவிருக்கும் அரசியல் விவகாரங்கள் குறித்து ஆலோசிப்பதற்காக இருவருக்கும் இடையே நடைபெறும் 6ஆவது சந்திப்பு இதுவாகும்.

இது தொடர்பில் உத்தியோகபூர்வமான தகவல்கள் எதுவும் வெளியிடப்படாத போதிலும், ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் விடயம் தொடர்பிலேயே பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. (ஐ)

# பற்றரியில் இயங்கும் பொம்மைகளால் குழந்தைகளின் உயிருக்கு ஆபத்தாகலாம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மே 11

சந்தையில் வாங்கப்படும் பற்றரியில் இயங்கும் பொம்மைகள் குழந்தைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலாளர் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இந்த பொம்மைகளில் லித்தியம், சில்வர் ஒக்சைட் மற்றும் அல்கலைன் பட்டன் பற்றரிகள் இருப்பதால், குழந்தைகள் அவற்றை விழுங்கலாம், காது அல்லது மூக்கில் வைக்கலாம்.

இந்த மின்கலங்களை குழந்தைகள் விழுங்கினால், அதன் மின் இரசாயன செயல்பாட்டால் குழந்தைக்கு உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடும். உணவு பாதையின் முதல் பகுதி இயற்கையாகவே குறுகலாக இருப்பதால், இவற்றை விழுங்கும் போது அதிக பாதிப்பு ஏற்படலாம்.

விழுங்கப்பட்ட பற்றரி வயிற்றில் பயணித்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனூடாக வயிற்றில் பல பாதிப்புகள் ஏற்படுவதுடன், சுவாசக் குழாய் அடைப்பு காரணமாக உயிரிழப்புக்கள்கூட ஏற்படலாம்.

சிறு குழந்தை இவ்வாறான சம்பவத்தில் பாதிக்கப்பட்டால் உடன் மருத்துவமனையில் சேர்ப்பிக்க வேண்டும். அதுவரை, 10 நிமிடங்களுக்கு 2 மேசைக்கரண்டி சுத்தமான தேனை குழந்தைக்கு முதலுதவியாக வழங்குமாறும் மருத்துவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# ஆட்சிக் கவிழ்ப்பை ஏற்படுத்தவே அறகலயவுக்கு வழிவகுக்கப்பட்டது

## நாமல் ராஜபக்ஷ எம். பி.



கொழும்பு, மே 11

நாட்டில் ஆட்சி கவிழ்ப்பை முன்னெடுப்பதற்காக பலர் மே 9 காலிமுகத்திடல் போராட்டத்துக்கு வழிவகுத்தனர் என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம். பி. தெரிவித்துள்ளார்

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை நிகழ்வு ஒன்றின்போது சந்தித்தார். அப்போது கருத்துரைத்த அவர்,

அறகலயவை விட அதனை முன்னெடுத்தவர்கள் பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்பட்டுள்ளனர். போராட்டத்தில் காயமடைந்தவர்கள் இன்னும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சொத்துகள், வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

இந்த நாட்டில் சுயலாப தேவைக்காக ஜனநாயக உரிமைகளை பயன்படுத்துகின்றனர். நாட்டு மக்கள் புத்திசாலிகள். எனவே, போலி வாக்குறுதிகளை வழங்கி அரசியல் இலாபம் தேடுபவர்களிடம் ஏமாற மாட்டார்கள் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் வெப்ப காலநிலையால் பகலில் வெறிச்சோடும் அம்பாறை

அக்கரைப்பற்று, மே 11

**நாடு முழுவதும் கடுமையான வெப்பநிலையுடனான காலநிலை நீடித்து வருகிறது. இந்த நிலையில், அம்பாறையில் நகரப் பகுதிகளில்பகல் வேளைகளில் மக்களின் நடமாட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது.**

கல்முனை, சவளக்கடை, சம்மாந்துறை, மத்திய முகாம் ஆகிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், வர்த்தக நிலையங்களில் வியாபாரமும் வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

பகல் வேளைகளில் நடமாட்டம் குறைந்து காணப்பட்டாலும், தற்போது இரவு நேர அங்காடிகள் திறக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெறுகின்றன.

பொதுமக்கள் ஒன்றுகூடும் சில இடங்களில் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

# திருமலையில் கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடை!


திருகோணமலை, மே 11

கட்டாக்காலியாக திரியும் நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த அவற்றுக்கு கருத்தடை செய்யப்பட்டது.

இந்த செயல்பாடு நேற்று முன்தினம் திருகோணமலை நகரில் மேற்கொள்ளப்பட்டது.

கிழக்கு மாகாண கால்நடை சுகாதார திணைக்களமும் திருகோணமலை நகர சபையும் இனைந்து திருகோணமலை நகரில் முன்னெடுத்த இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கால்நடை சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர், திருகோணமலை நகர சபையின் செயலாளர் வெ. இராஜசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளை மலையடி கிராமத்தில் மீளமைப்பு!



சம்மாந்துறை, மே 11

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளை சம்மாந்துறை - மலையடி கிராமத்தில் மீள்கட்டமைக்கப்பட்டுள்ளது.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஐ. எம். மன்சூர் தலைமையில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர் எம். எஸ். உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளர் ஏ. சீ. சமால்டீன், அரசியல் அதி உயர் பீட உறுப்பினர்களும் பங்கேற்றனர். (ஐ)

# மனிதன் - யானைகள் மோதல் ஆதிவாசிகளுக்கு விழிப்புணர்வு


அக்கரைப்பற்று, மே 11

மனிதன் - காட்டு யானை மோதலில் இருந்து ஆதிவாசி சமூகத்தை பாதுகாக்கும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றை ஹெல்ப் சிறீ லங்கா அமைப்பு அம்பாறையில் நடத்தியுள்ளது.

மாதுறு ஓயா தேசிய பூங்காவில் சுமார் 350 முதல் 400 யானைகள் உள்ளன. மாதுறு ஓயா பெரிய குளத்தில் நன்னீரின் பெரும் பகுதி யானைகள் நீர் அருந்த ஒதுக்கப்பட்டுள்ளது.

மகாவலி சி பிரதான திட்ட வரைபில் வரையறுக்கப்பட்ட யானை வழித்தடங்களில் திசை மாறி வழியை இழந்த யானைகள் அடிக்கடி அருகில் உள்ள வஸ்கமுவ தேசிய பூங்காவுக்கு செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

யானைகள் சுதந்திரமாக திரியும் எலெகொடலீய வழித்தடம் இப்போது மனித வாழ்விடங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.



இந்தப் பகுதிகளில் உள்ள கிராமங்கள் அடிக்கடி மனித யானை மோதலுக்கு உள்ளாகின்றன. இவ்வாறாக இந்தப் பிரதேசத்தில் சூரியபொகுண (தெஹியத்தகண்டிய) என்ற கிராமத்தில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்து.

இந்த நிகழ்வில் இலங்கை ஆதிவாசிகள் சங்கத் தலைவர் விஸ்வகீர்த்தி சிறீ வனஸ்பதி உறுவாரிகே வன்னில அத்தோவும் பங்கேற்றிருந்தார். (ஐ)

# அட்டாளைச்சேனையில் உணவகங்கள் சோதனை!

அக்கரைப்பற்று, மே 11

சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, அட்டாளைச்சேனை சுகாதார மருத்துவ அதிகாரி ஏ. எம்.முகம்மது இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்று பொது மக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொதுச் சுகாதார பரிசோதகர்களால் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பரிசோதனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள், பொருட்கள், காலவதியான பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்படுவதுடன், வர்த்தகர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரிவோர் சுகாதாரமான முறையில் பணியாற்றவும் அறிவுறுத்தப்பட்டனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

தென்கிழக்கு பல்கலையில்

# சர்வதேச ஆய்வரங்கு பிற்போடப்பட்டுள்ளது

அக்கரைப்பற்று, மே 11

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் பத்தாவது சர்வதேச ஆய்வரங்கு மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வரங்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

எனினும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அனைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொடர் வேலை நிறுத்த போராட்டம் காரணமாக சர்வதேச ஆய்வரங்கை திட்டமிட்ட திகதியில் நடத்த முடியாதுள்ளது. இதனால், ஆய்வரங்கு திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கல்வி சாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்ததன் பின் ஆய்வரங்கு நடைபெறும் புதிய திகதி அறிவிக்கப்படும் என்று தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் சர்வதேச ஆய்வரங்க குழு அறிவித்துள்ளது. (ஐ)

# மென்பந்து கிரிக்கெட் போட்டி; ப்ளூ மவுண்டன் அணி சம்பியன்

நிந்தவூர், மே 11

"ப்ளூ மவுண்டன் சம்பியன்ஸ் கிண்ணம்-2024" இன் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் ப்ளூா மவுண்டன் அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் நிந்தவூர், கல்முனை, பாலமுனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, ஆகிய இடங்களை சேர்ந்த அணிகள் பங்குபற்றின.

இந்த சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்துக்கு நிந்தவூர் "ப்ளூ மவுண்டன் "அணியை எதிர்த்து நிந்தவூர் அட்வென்சர் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் சம்பியன் கிண்ணத்தையும் 20 ஆயிரம் பணப்பரிசையும் ப்ளூா மவுண்டன் தனதாக்கி கொண்டது. இரண்டாம் இடத்தை தனதாக்கிய நிந்தவூர் அட்வென்சர் விளையாட்டுக்கழகத்தினருக்கு 10 ஆயிரம் பணப்பரிசும் கேடயமும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

சுற்றுப் போட்டியில் தொடர் ஆட்ட நாயகனாக ப்ளூ மவுண்டன் அணியின் நஜாத், சிறந்த துடுப்பாட்ட வீரராக அட்வென்சர் அணியின் வாபீக், சிறந்த பந்துவீச்சாளாக புளூ மவுண்டன் அணியின் நபீர், இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக பிர்னாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதிப் போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாக அட்வென்சர் விளையாட்டு கழகத்தின் தலைவர் எம். முஹாஜிர் கலந்து கொண்டு கிண்ணங்களை வழங்கி வைத்தார்.

மேலும், ப்ளூா மவுண்டன் கழகத்தின் தலைவர் எம். சம்சுன் அலி, சுலைமான் பாரி, அட்வென்சர் விளையாட்டு கழகத்தின் முகாமையாளர் மர்சூக், சோஷியல் டிவி பணிப்பாளர் என்.எம் சிராஜ், ஸ்போர்ட்ஸ் மீடியா தலைவர் வை.சியான், இசாக், ப்ளூா மவுண்டன் கழகத்தின் செயலாளர் சாக்கீர், பொருளாளர் சமீம், நிகாப், சப்ரி நௌசாட், இம்சாத், ஆசிக் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-06)

# சட்டவிரோத காணி அபகரிப்பு வாகனேரியில் முறியடிப்பு!

மட்டக்களப்பு, மே 11

மட்டக்களப்பு - வாகனேரி கிராம உத்தியோகத்தர் பிரிவில் படுகாடுகண்ட பிரதேசத்தில் சட்டவிரோத காணி அபகரிப்பில் சிலர் ஈடுபடுகின்றனர் என்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த இரு தினங்களாக வனவள திணைக்களத்துக்கு சொந்தமான வனப்பகுதியில் இனந்தெரியாத சிலர் கனரக வாகனத்தின் உதவியுடன் துப்பரவு பணியில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் மாவட்ட செயலகத்துக்கு கிடைத்த முறைப்பாட்டை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஜஸ்டினா முரளிதரனின் ஆலோசனைக்கு அமைய அந்த இடம் முற்றுகையிடப்பட்டது.

இதையடுத்து, துப்புரவு பணியிலிருந்த கனரக வாகனத்தை கைப்பற்றிய அதிகாரிகள் அதனை பொலிஸாரிடம் ஒப்படைத்து நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் அரசியல் சமநிலையை சீர்குலைக்க அமெரிக்கா முயற்சி!

## ரஷ்யா பகிரங்க குற்றச்சாட்டு

மொஸ்கோ, மே 11

**இந்திய மக்களவைத் தேர்தலில் அமெரிக்கா தலையிட முயற்சி செய்து வருவதாக ரஷ்யா பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. தேர்தலில் தலையீடு செய்வதன் மூலம் உள்நாட்டு அளவில் நிலவும் அரசியல் சமநிலையை சீர்குலைக்க அமெரிக்கா முயற்சிப்பதாகவும் ரஷ்யா சுட்டிக் காட்டியுள்ளது.**



ரஷ்ய வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

காலிஸ்தான் பிரிவினைவாதி குர்பத் வந்த் சிங் பன்னுன் கொலைச் சதியில் இந்தியர்களுக்கு தொடர்பு உள்ளதாக ஆதாரமற்ற குற்றச்சாட்டை அமெரிக்கா முன்வைத்துள்ளது.

இந்திய தேசம் தொடர்பான புரிதல் மற்றும் அதன் வரலாறு பற்றி அறியாமல் அமெரிக்கா செயல்பட்டு வருகிறது. இவ்வாறு, இந்தியாவின் மதச் சுதந்திரம் சார்ந்து ஆதாரமற்ற வகையில் அமெரிக்கா தொடர்ந்து கருத்து வெளியிட்டு வருகிறது.

இந்தியாவில் நிலவும் அரசியல் சமநிலையை சீர்குலைக்க வேண்டும் என்பதுதான் இதற்குக் காரணம். இந்திய பொதுத் தேர்தலை சிக்கலாக்கும் நோக்கில் அமெரிக்கா இப்படி செய்கிறது- என்றார்.

சர்வதேச மதச் சுதந்திரத்துக்கான அமெரிக்க ஆணைக் குழு இந்தியாவின் மதச் சுதந்திரம் உட்பட பல்வேறு பிரச்னைகள் சார்ந்து குற்றச்சாட்டை முன்வைத்திருந்தது. மத நம்பிக்கை சார்ந்த உரிமை மீறல்களில் இந்தியா உட்பட 16 நாடுகள் ஈடுபடுவதாக அந்த ஆணைக் குழு குற்றச்சாட்டு வைத்தது. இதற்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சு வலுவான கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஓடுபாதையில் செல்லும்போது திடீரென தீ பிடித்த விமானம்

## செனகலில் 10 பேர் காயம்



செனகல், மே 11

செனகலில் 85 பேருடன் பயணித்த போயிங் 737 என்ற விமானம் திடீரென தீப்பிடித்து ஓடுபாதையிலிருந்து சறுக்கி விழுந்ததில் விமானி உட்பட 10 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் செனகல் தலைநகர் டகாரிலிருந்து 50 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பிளேஸ் டியாக்னே சர்வதேச விமான நிலையத்தில் புதன்கிழமை இடம்பெற்றதாக அந்நாட்டு போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார்.

தீப்பிடித்த விமானத்திலிருந்து பயணிகள் வெளியேற்றப்பட்டதோடு, விமானம் தீப்பிடித்ததால் பயணிகள் அச்சத்தில் அலறினர்.

டிரான்ஸ் ஏர் விமான நிறுவனத்தின் செனகல் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் 79 பயணிகள், இரண்டு விமானிகள் மற்றும் நான்கு ஊழியர்களுடன் அயல் நாடான மாலியிலுள்ள பமாகோவுக்கு சென்ற போது இந்த விபத்து ஏற்பட்டது.

(எ)

# எங்கள் விரல் நகங்களையும் பயன்படுத்தி போரிடுவோம்

## அமெரிக்க ஜனாதிபதிக்கு இஸ்ரேல் பிரதமர் பதில்



ஜெருசலேம், மே 11

இஸ்ரேல் தன்னிடம் உள்ள அனைத்து வளங்களையும் பயன்படுத்தி தனியாகப் போரிடும் என அந்த நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

தனித்து நிற்க வேண்டிய நிலையேற்பட்டால் நாங்கள் தனித்து நிற்போம். தேவைப்பட்டால் எங்கள் விரல் நகங்களையும் பயன்படுத்தி போரிடுவோம்- என்றார்.

இஸ்ரேலுக்கான ஆயுத விநியோகத்தை இடைநிறுத்துவது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விடுத்துள்ள எச்சரிக்கைக்கு பதிலளித்துள்ள நெதன்யாகு இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் தனது 76 ஆவது சுதந்திர தினத்தை நெருங்குகின்றது. 1948 ஆம் ஆண்டு யுத்தத்தின்போது எங்களிடம் ஆயுதங்கள் இருக்கவில்லை.

இஸ்ரேலுக்கு எதிராக ஆயுதத்தடை விதிக்கப்பட்டிருந்தது. எங்களிடம் உள்ள வலிமை, வீரம், ஒற்றுமையுடன் நாங்கள் வெற்றி பெற்றோம்.

அமெரிக்காவுடன் அனேக விடயங்களில் நாங்கள் பொதுவான கருத்தை கொண்டிருந்தோம். சில விடயங்கள் குறித்து கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இருப்பினும் கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வு காணமுடிந்தது. - என்றும் இஸ்ரேல் பிரதமர் கூறினார்.

(எ)

# மரபணு சிகிச்சைக்கு பிறகு செவித்திறன் பெற்ற சிறுமி

கேம்பிரிட்ஜ், மே 11

செவித்திறன் இல்லாமல் பிறந்த 18 மாதச் சிறுமிக்கு நவீன மரபணு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதன் பிறகு சிறுமி செவித்திறன் பெற்றுள்ளாள்.

இந்த சிகிச்சையின் மூலம் இயல்பானவர்கள் பெற்றுள்ள செவித்திறன் அளவுக்கு மிக நெருக்கமான நிலைக்கு அந்த சிறுமியின் செவித்திறன் செயல்பாடு அமைந்துள்ளதாக காது அறுவை சிகிச்சை நிபுணர் மனோகர் பான்ஸ் தெரிவித்தார்.

பிரிட்டனைச் சேர்ந்த பிறந்து 18 மாதமான சிறுமிக்கு ஆடிட்டரி நியூரோபதி என்ற பாதிப்பு காரணமாக காதில் இருந்து மூளைக்குச் செல்லும் நரம்பில் பாதிப்பு இருந்துள்ளது. இந்த பாதிப்பு காரணமாக செவித்திறன் இல்லாமல் அவர் பிறந்தார்.

இந்தச் சூழலில் கேம்பிரிட்ஜ் பகுதியிலுள்ள அடன்புரூக்ஸ் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சிறுமியை கொண்டு சென்றனர். அங்குதான் சிறுமிக்கு இந்த மரபணு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த சிகிச்சையின் முடிவுகள் தாங்கள் எதிர்பார்த்ததை விட சிறந்த முடிவுகளைத் தந்துள்ளதாக மருத்துவர் மனோகர் கூறினார். இந்த வகை மரபணு சிகிச்சையின் மூலம் செவித்திறன் பாதிப்பு உள்ளவர்களுக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளிக்க முடியும் என தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



அமெரிக்காவின் பயோடெக் நிறுவனமான ரீஜெனெரானால் இந்த மரபணு சிகிச்சை முறையை வடிவமைத்ததாக மனோகர் பான்ஸ் தெரிவித்தார்.

இதே முறையின் கீழ் சீனா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் இந்த சிகிச்சையின் கீழ் செவித்திறன் பெற்ற உலகின் முதல் ஆளாக சிறுமி ஒபல் இருப்பதாக மனோகர் பான்ஸ் தெரிவித்தார்.

(எ)

# பொலிஸ் நிலையத்தில் துப்பாக்கி பிரயோகம்

## பாரிஸில் பதற்றம்

பாரிஸ், மே 11

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பொலிஸ் நிலையமொன்றுக்குள் நபர் ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கியைப் பறித்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் பொலிஸார் இருவர் காயமடைந்தனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

பெண் ஒருவரைத் தாக்கிய மைக்காக கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் பொலிஸ் நிலையத்துக்குள் துப்பாக்கியைப் பறித்து இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டார். இதில் பொலிஸார் இருவர் கடும் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அந்த நபர் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதும் பொலிஸாரும் பதில் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

ஒலிம்பிக் போட்டிகளுக்காக பிரான்ஸில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# ஏப்ரல் 2024 உலகின் அதிக வெப்பமான மாதம்

## ஐரோப்பிய வானிலை ஆய்வு மையம் தகவல்

பாரிஸ், மே 11

சர்வதேச கடல் மற்றும் புவி மேற்பரப்பு வெப்ப சராசரி ஏப்ரல் 2024 இல் புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வானிலை ஆய்வு மையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

உலகின் பெரும்பாலான [illegible] தால் வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்த நிலையில் உலகில் அதிக வெப்பம் பதிவான மாதமாக இந்த ஏப்ரல் மாதமாக இருந்ததாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வானிலை ஆய்வு மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்நினோ தாக்கம் படிப்படியாக வலுவிழந்து வரும் சூழலில் அதன் இறுதிக்கட்ட தாக்கத்தால் வெப்பம் கடுமையாக அதிகரித்து வருவதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். மேலும் அதீத வறட்சி, பருவம் தவறிய மழை, வெள்ளம், சூறாவளிகள் போன்றவை இந்தத் தாக்கத்தால் நீடிக்கும் என்றும் எச்சரித்துள்ளனர்.

(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இ. தொ. காவின் அரசியல் பலத்தாலேயே பெருந்தோட்ட மக்கள் நிம்மதி வாழ்வு!

## சொல்கிறார் ராமேஸ்வரன் எம். பி.

கொழும்பு, மே 11



**இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் பலத்தால்தான் பெருந்தோட்ட மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள். குறைகளை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருந்தால் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியாது. சம்பள விவகாரத்தில் ஜனாதிபதி சிறந்த தீர்வை பெற்றுக்கொடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது - என்று ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அவர் ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், நாட்டில் எத்தனை சட்டங்கள் காணப்பட்டாலும், பெருந்தோட்டங்களுக்கு என்று தனி சட்டங்கள் காணப்படுகின்றன. அவை பெருந்தோட்ட கம்பனிகளின் சட்டம். சம்பள விவகாரம் தொடர்பில் பேச்சுக்கு தொழில் அமைச்சர் பல முறை அழைப்பு விடுத்தும் தோட்ட கம்பனிகள் வருகை தரவில்லை. இவ்வாறான பின்னணியில்தான் விசேட வர்த்தமானி ஊடாக பெருந்தோட்ட மக்களுக்கு 1,700 ரூபாய் சம்பளத்துக்கான வர்த்தமானி அறிவித்ததை தொழில் அமைச்சு வெளியிட்டுள்ளது. ஜனாதிபதி மற்றும் தொழில் அமைச்சர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டின் பொருளாதாரத்துக்கு பெருந்தோட்ட மக்கள் பெரும் பங்களிப்பு வழங்குகிறார்கள். ஆனால், அவர்கள் பெருந்தோட்ட கம்பனிகளால் பல வழிமுறைகளில் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். தொழிலுக்கு வருகை தராவிட்டால் தோட்டத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்று குறிப்பிடும் நிலைமை மாற்றமடைய வேண்டும்.

குத்தகை அடிப்படையிலேயே பெருந்தோட்டங்கள் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன. ஆனால், இன்று கம்பனிகள் பெருந்தோட்டங்களை தமது விருப்பத்துக்கு அமைய நிர்வகிக்கின்றன. பெருந்தோட்டங்களில் வீடமைப்பு, குடிதண்ணீர் வசதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகளை அரசாங்கமே முன்னெடுக்கிறது. இந்த அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதற்கும் பெருந்தோட்ட கம்பனிகளிடம் அனுமதி பெற வேண்டிய சூழல் காணப்படுகிறது - என்றார். (ஐ)

# ரூ. 25 இலட்சம் பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மே 11

ராகமை பொலிஸார் முன்னெடுத்த வாகன சோதனையில் 25 இலட்சம் மதிப்புடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராகமை - வல்பொல பட்டலந்தை பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து, 102 கிராம் 940 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. இதன் மதிப்பு சுமார் 25 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாகும். கைதான சந்தேக நபர் 45 வயதுடைய "பாஸ் ரொஷான்" என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர், முன்னரும் ஹெரோயின் கடத்தல் சம்பவத்துக்காக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 15 வயது சிறுவன் மாயம் பொலிஸார் விசாரணை!

கொழும்பு, மே 11

காணாமல் போன 15 வயது சிறுவன் தொடர்பில் கொழும்பு - மஹரகமை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பன்னிபிட்டிய, கொஸ்கஹ ஹேன பிரதேசத்தைச் சேர்ந்த கலன மிஹிரங்க என்ற 15 வயது சிறுவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இவரின் தாய் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் இவர் தனது தந்தை மற்றும் சகோதரியுடன் வசித்துள்ளார்.

சிறுவனின் தந்தை கடந்த 5ஆம் திகதி சுகயீனமடைந்தார். இதனால், சிறுவனை வீட்டில் விட்டுவிட்டு சகோதரி தந்தையை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார்.

பின்னர், அவர்கள் வீடு திரும்பியபோது சிறுவனை காணவில்லை. தேடுதலின் பின்னர் அவர்கள் இருவரும் மஹரகமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். (ஐ)

# மக்களின் தோள் மீது சுமைகள் அதிகரிப்பு

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மே 11



நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினாலும், நாட்டின் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படவில்லை. பொருட்களின் விலை அதிகரித்து மக்கள் வாழ்வதற்குப் போராட வேண்டிய நிலையே இருக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம்வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரையைத் தொடர்ந்து தனது கருத்தை முன்வைத்து உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி அடிக்கடி இந்த சபையில் தகவல்களை வெளியிட்டு கருத்துகளை வெளியிட்டுள்ளார். அதன்போது அவர் தீப்பிடித்த நாடு மற்றும் நரகத்தை பொறுப்பேற்றதாகக் கூறியுள்ளார். சிலர் சவால்களை ஏற்றுக் கொள்ளாது நிபந்தனைகளை முன்வைக்கும் போது, தான் நிபந்தனைகள் இன்றி பொறுப்பேற்றதாகவும் கூறியுள்ளார்.


இந்நிலையில், நான் சில விடயங்களை முன்வைக்க வேண்டியுள்ளது.

அவர் என்ன கூறினாலும் புதிய இயல்பு நிலைமையே ஏற்பட்டுள்ளது என்றே ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இந்த புதிய இயல்பு நிலைமையில் பொருளாதார முன்னேற்றமடையாது பொருளாதாரம் சுருங்கியுள்ளது. மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வறுமை அதிகரித்துள்ளதுடன், தொழில் இன்மை அதிகரித்துள்ளது.

எரிபொருள், எரிவாயு விலைகள் அதிகரித்துள்ளன. வியாபாரங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. மந்தபோசணை அதிகரித்துள்ளது. சர்வதேச நாடுகளும் இது தொடர்பில் அறிக்கைளைத் தயாரித்துள்ளன. மக்களின் தோலில் கடும் சுமைகளை ஏற்படுத்தியே புதிய இயல்பு நிலைமை உருவாகியுள்ளது. ஆனால் தேவையான விடயங்கள் முன்னேற்றமடையவில்லை. மக்களின் தோல் மீது சுமையே அதிகரித்துள்ளது - என்றார். (அ)

# இலங்கை - பிரிட்டனுக்கு இடையிலான 2ஆவது இராஜதந்திர கலந்துரையாடல்

கொழும்பு, மே. 11



பிரிட்டனால் வழங்கப்படும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான வர்த்தக உதவித் திட்டத்தின் கீழ் ஏற்றுமதிகளின் அளவை அதிகரித்தல் உள்ளடங்கலாக வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து இலங்கை - பிரிட்டன் நாடுகள் கூட்டாக ஆராய்ந்துள்ளன.

இலங்கை - பிரிட்டனுக்கு இடையிலான இரண்டாவது இராஜதந்திர கலந்துரையாடல் கடந்த செவ்வாய்கிழமை கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் இலங்கை சார்பில் பங்கேற்ற பிரதிநிதிகள் குழுவுக்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் ஷோபினி குணசேகர வும், பிரிட்டன் சார்பில் பங்கேற்ற பிரதிநிதிகள் குழுவுக்கு வெளியுறவு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்திய மற்றும் இந்து சமுத்திர பிராந்திய விவகாரப் பிரிவின் பணிப்பாளர் பென் மெல்லரும் தலைமை தாங்கினர்.

இக்கலந்துரையாடலின் போது இருநாடுகளுக்கும் இடையில் சுமார் 75 வருடங்களுக்கும் மேலாக நிலவும் நல்லுறவு குறித்தும், அவ்வப்போது பரஸ்பரம் நிகழும் உயர்மட்ட விஜயங்கள் குறித்தும் நினைவு கூரப்பட்டது.

இதேபோன்று உலக அரங்கின் அண்மையகால மாற்றங்களின் பின்னணியில் வெளிவிவகார மற்றும் பாதுகாப்புத்துறை சார் கொள்கைகள் குறித்து இரு நாடுகளின் பிரதிநிதிகளும் தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர். அத்தோடு இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இதேவேளை பிரிட்டனால் வழங்கப்படும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான வர்த்தக உதவித்திட்டத்தின் கீழ் ஏற்றுமதிகளின் அளவை அதிகரித்தல் உள்ளடங்கலாக வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் இடையில் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் வகையில் பிரிட்டனுக்கான ஸ்ரீலங்கன் விமானசேவை நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

மேலும் சுகாதாரத்துறை உள்ளடங்கலாக சகல விதங்களிலும் சட்டரீதியான புலம்பெயர்வை ஊக்குவிப்பதற்கு ஏதுவான வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை இருநாட்டுப் பிரதிநிதிகளும் ஏற்றுக்கொண்டதுடன், கடற் பிராந்திய ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்தும், கல்வித்துறைசார் வாய்ப்புக்களை ஊக்குவிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (அ)

# மதுபானம், சிகரெட் கடத்திய மூன்று வர்த்தகர்கள் கைது!

கொழும்பு, மே 11

ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு மதுபானம், சிகரெட்களுடன் மூன்று வர்த்தகர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள் ளனர்.

கொழும்பு 14 , கொழும்பு 12 மற்றும் ஹற்றன் பிரதேசங்களை சேர்ந்த 30 ,38 மற்றும் 52 வயதுடைய மூன்று வர்த்தகர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் நேற்று முன்தினம் மாலை இந்தியாவிலிருந்து கட்டுநாயக்காவை வந்தடைந்தனர். மூவரும் சோதனைகளை நிறைவு செய்து கொண்டு வெளியேறியபோது சி. ஐ. டியினர் நடத்திய சோதனையில் பிடிபட்டனர்.

கைதானவர்களிடம் இருந்து 124 வெளிநாட்டு மதுபானம், 1,800 வெளிநாட்டு சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்...

சேர்ந்தவர்கள் இரு வேறுபட்ட நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த நிலையிலேயே தமிழ் அரசுக் கட்சி தனது நிலைப்பாட்டை தீர்மானமாக அறிவிப்பதற்காக எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கூடவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழ் பொது வேட்பாளர் தவிர, கட்சிக்கு எதிராக திருகோணமலை நீதிமன்றில் நடை பெற்றுவரும் வழக்கு தொடர்பிலும் பேசப்படலாம் என்று தெரியவருகின்றது.

## முஜிபுர்...

ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் மூலமாக பாராளுமன்ற உறுப்பினரான டயானா கமகேயின் பதவி நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து வறிதானது. அவரின் இடத்துக்கே தற்போது முஜிபுர் ரஹ்மானை ஐக்கிய மக்கள் சக்தி நியமித்துள்ளது.

ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் கடந்த 2020ஆம் ஆண்டு கொழும்பு முஜிபுர் ரஹ்மான் உள்ளூராட்சி தேர்தலில் கொழும்பு மாநகரசபை மேயர் வேட்பாளராக போட்டி யிடுவதற்காக கடந்த 2023 ஜனவரி 20ஆம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆசிரியர்...

பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் நாம் விண்ணப்பங்கள் கோரியிருந்தோம். 52 ஆயிரம் பேர் அதற்காக விண்ணப்பித்திருந்தனர்.

அவர்களுக்கு எழுத்து மூல பரீட்சை நடத்தப்பட்டது. ஆசிரியர் சேவை யாப்புக்கு இணங்க கடந்த வருடம் மார்ச் மாதம் நேர்முக தேர்வு நடத்த நாம் தயாராக இருந்தோம் அனுமதி அட்டை களையும் நாம் அனுப்பியிருந் தோம் அந்த நிலையிலேயே 33 பேர் நீதிமன்றுக்கு சென்று அதனை சவாலுக்கு உட் படுத்தினர்.

வயதெல்லையை 45 வரை நீடிக்குமாறு கோரி அவர்கள் அந்த மனுவை தாக்கல் செய்திருந்தனர். இன்னும் சிலர் நேர்முகத் தேர்வின்றி நியமனங்களை வழங்குமாறு கோரி மனு தாக்கல் செய்திருந்தனர். இரு மனுக்களையும் கவனத்தில் கொண்டு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

அந்த வகையில் கடந்த வருடம் மார்ச் மாதத்திலிருந்து இன்று வரை அந்தத் தடை உத்தரவு அமுலில் உள்ளது. அதனால் எமக்கு அதற்கான பரீட் சையை நடத்த முடியாத நிலையே தற்போதுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கு உள்ள நிலையில் எமக்கு அது தொடர்பில் வேறு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது.

இதனிடையே, ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் மற்றும் பதவி விலகியோருக்கு பதிலாக ஆசிரியர்களை நியமிப்பதற்கு கல்வியமைச்சின் அனுமதியைப் பெற்று நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அந்த வகையில் 9 மாகாணங்களிலும் உரிய பரீட்சை நடத்தப்பட்டு நியமனக் கடிதங்கள் வழங்க ஆரம்பிக்கும் போது மேலும் ஒரு தரப்பினர் நீதிமன்றத்துக்கு சென்று மேற்படி தரப்பினருக்கு நியமனம் வழங்கும் வரை இந்த நியமனத்தை வழங்கக்கூடாது என நீதிமன்றத்தில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

எனினும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அதற்கான தடை நீக்கப்பட்டது. அந்தத் தடை நீக்கப்பட்டதை தொடர்ந்து பட்டதாரிகளுக்கு கட்டம் கட்டமாக நியமனம் வழங்கும் நடவடிக்கையை நாம் மேற்கொண்டோம்.

அந்த நிலையிலேயே நேற்றும் (நேற்றுமுன்தினம்) உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதன் முடிவை பொறுத்தே ஆசிரிய நியமனங்களை வழங்க முடியும் - என்றார். (ஐ)

## பொதுஜன...

ஜூன் 16 ஆம் திகதிக்கு முன்னர் தீர்மானிப்பது சிறந்தது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்குமா என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பஸில், "அவருக்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பதை கட்சியே தீர்மானிக்கும்" - என்றும் பஸில் கூறினார். (ஐ)

## ரணிலின்...

ஆதாயம் தேடுவோரின் விருப்பமே தமிழ் பொது வேட்பாளரை நிறுத் தும் முயற்சி என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

மேலும், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளையும் அவலங்களையும் அரசியல் கோஷங்களாக பயன்படுத்தி குறுகிய அரசியல் ஆதாயம் தேடும் தரப்புக்கள், தமது நலன்களுக்காக தமிழ் மக்களை இன்னுமொரு முறை பலிக்கடாவாக்க முனைகிறார்கள். இவ்வாறான முட்டாள் தனமான முயற்சிகள் கடந்த காலங்களில் ஆயுதப் போராட்ட குழுக்களாலும் மிதவாத தமிழ் தலைமைகளினாலும் பலமுறை முன்னெடுக்கப்பட்டன.

ஆனால், அவற்றினால் எமது மக்களுக்கு எந்தவித நன்மைகளும் கிடைக்கவில்லை. மாறாக மீளமுடியாத பின்னடைவுகளையே ஏற்படுத்தியிருந்தன.

எனினும், நடைமுறை சாத்தியமான சிந்தனையோ, சரியான வேலைத்திட்டத்தை முன்வைத்து அதற்காக உழைக்கும் குணாம்சமோ இல்லாதவர்கள், எமது மக்களை உணர்ச்சியூட்டும் தோற்றுப்போன வழிமுறையையே மீண்டும் கையில் எடுத்து தம்மை அரசியலில் நிலைநிறுத்த முனைகிறார்கள்." - என்றும் கூறினார். (ஐ)

## ராஜபக்ஷக்கள்...

ஆட்சியமைக்க முடியாது என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பெரமுன கட்சியின் பிரசார பணிமனை திறப்புவிழாவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். எமது வேட்பாளர் யார் என்பதை கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்துவார். சிறந்த வேட்பாளரை களமிறக்குவோம் என்ற உறுதியை நாட்டு மக்களுக்கு வழங்க முடியும்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்படுவதற்கு முன்னரே ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை அவர்கள் அறிவித்து விட்டார்கள்.

முன்னறிவிப்புக்களை விடுப்பதால் மாத்திரம் தேர்தலில் வெற்றிப் பெற முடியாது. அறிவார்ந்தவர்கள் மக்கள் விடுதலை முன்னணிக்கு வாக்களிக்க மாட்டார்கள். வன்முறையான அரசியல் கலாசாரத்தில் இருந்து விடுபட்டு, ஜனநாயக அரசியலுக்கு பிரவேசித்துள்ளோம் என்று மக்கள் விடுதலை முன்னணியினர் குறிப்பிடுகிறார்கள்.

ஆனால், இவர்களின் உண்மை முகம் அவர்களின் பேச்சிலேயே வெளிப்படுகிறது. அழிப்பதும்,தீ வைப்பதும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் கொள்கையாகும். 2022 ஆம் ஆண்டு சம்பவத்தை தொடர்ந்து பொதுஜன பெரமுன பலவீனமடைந்து விட்டது என எதிர்தரப்பினர் கருதுகிறார்கள். அரசியல் களத்தில் பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ளது. ராஜபக்ஷர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் எவரும் ஆட்சியமைக்க முடியாது - என்றார். (ஐ)

# ஒட்டகப்புலத்துக்கு செல்ல இரண்டு பாதைகள் திறப்பு



யாழ்ப்பாணம், மே 11

தெல்லிப்பழை - ஒட்டகப்புலத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 234.8 ஏக்கர் காணிக்குள் பொதுமக்கள் செல்வதற்கான இரண்டு பாதைகள் திறக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸூக்கும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக மாவட்ட செயலாளர் (காணி), தெல்லிப்பளை பிரதேச செயலாளர் ஆகியோர் கடந்த 07 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட பகுதிக்கு களப் பயணம் சென்று படைத் தரப்பினருடன் கலந்துரையாடியதற்கு அமைவாகவே இந்த இரண்டு வீதிகள் திறக்கப்பட்டுள்ளன.

பொன்னாலை - பருத்தித்துறை கடற்கரை வீதியில் பலாலி வடக்கு பாடசாலைக்கு அருகிலும், விமான நிலைய வீதியில் மருதடி சந்தியிலிருந்து பலாலி நோக்கி செல்லும் வீரப்பளை வீதியும் திறக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக விமான நிலைய வீதி ஊடாகவும், ஒட்டகப்புலம் பிரதான வீதியூடாகவும் விடுவிக்கப்பட்ட காணிகளுக்கு செல்ல ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வயாவிளான் கிழக்கு ( ஜே/244), வயாவிளான் மேற்கு (ஜே/245), பலாலி வடக்கு(ஜே/254), பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி தெற்கு (ஜே/252) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 234.8 ஏக்கர் காணி அண்மையில் விடுவிக்கப்பட்டது.

இங்கு வசித்த 327 குடும்பங்கள் காணி உரிமை கோரி பதிவு செய்துள்ளதுடன், அவர்களில் 171 குடும்பங்களைச் சேர்த்தவர்கள் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தி துப்பரவு செய்யும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், ஏனைய மக்களும் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தி, துப்பரவு பணிகளை ஆரம்பிக்க மிக விரைவாக செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ)

# அனைத்து இந்தியப் படையினரும் மாலைதீவிலிருந்து வெளியேற்றம்

மாலே, மே 11

கால அவகாசம் நிறைவடையும் முன்னரே அனைத்து இந்திய இராணுவத்தினரும் மாலைதீவிலிருந்து வெளியேற்றப்பட்டனர் என்று மாலைதீவு ஜனாதிபதி முகமது மூயிஸின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இறுதியாக வெளியேற்றப்பட்ட இந்திய இராணுவத்தினரின் எண்ணிக்கை குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லையென சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாலைதீவிலிருந்த இந்திய இராணுவத்தினர் குறித்த தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் முகமது மூயிஸின் செய்தித் தொடர்பாளர் அறிவித்துள்ளார்.

சீன ஆதரவாளர் என கூறப்படும் தற்போதைய மாலைத்தீவு ஜனாதிபதியான முகமது மூயிஸ் இந்தியாவுடன் சுமுகமான உறவை கொண்டிராதவர். "தான் ஆட்சிக்கு வந்தால் மாலைதீவில் இருந்து இந்திய இராணுவத்தினரை விரட்டியடிப்பேன்" என தேர்தல் பிரசாரங்களிலும் அவர் கூறியிருந்தார்.

இதேநேரம், இந்திய இராணுவத்தினர் குறித்து கருத்து வெளியிட்ட செய்தி தொடர்பாளர்,

இன்றுடன் (நேற்றுடன்) இந்திய இராணுவத்தை சேர்ந்த ஒருவர்கூட மாலைதீவில் இருக்க மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார். இந்நிலையில் இந்திய இராணுவத்தினர் அனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளனர் - என்றார்.

அண்மையில், மாலைதீவில் நடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் முகமது மூயிஸின் கட்சி அமோச வெற்றி பெற்றது. இந்தியாவுடனான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், இந்த தேர்தல் அவரின் செல்வாக்கை நிரூபிப்பதற்கான தேர்தலாக பார்க்கப்பட்டது.

இதற்கமைய பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் மாலைதீவு ஜனாதிபதிக்கு சட்டங்களை நிறைவேற்று வது இலகுவானதாகும். முகமது மூயிஸின் இந்த வெற்றி சீனாவுக்கான வெற்றி யாக அமைவதுடன் இந்தியாவின் தோல்வி என்றும் கூட கூறப்பட்டது. (ஐ)

## சிறந்த...

மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின்போதே இருதரப்புத் தொடர்புகள், கடன்மறுசீரமைப்பு மற்றும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் மறுசீரமைப்புக்கள் என்பன பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், இலங்கையில் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு வழங்கிவரும் நிலையில், சிறந்த ஆட்சி நிர்வாகம் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் அவசியம் குறித்து தான் மத்திய வங்கி ஆளுநரிடம் வலியுறுத்தியதாகத் குறிப்பிட்டுள்ளார். (எ)

## பொலிஸார்...

குறித்த நபரை விரட்டிச் சென்றுள்ளனர். அப்போது வேகமாக சென்றவர் மின்கம்பத்துடன் மோதுண்டு உயிரிழந்தார்.

இந்த விபத்தையடுத்து அங்கு கூடிய பொதுமக்களால் அந்தப் பகுதியில் சில மணிநேரம் பதற்றம் நிலவியது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தொடர்பில் இருந்தவரால் கொல்லப்பட்டார் பெண்!

கொழும்பு, மே 11

4 வருடங்களுக்கு முன்னர் காலி - ஹினிதும பிரதேசத்தில் பெண் ஒருவர் கொல்லப்பட்டார். அந்தப் பெண்ணுடன் வாழ்ந்தவரே இந்தக் கொலையை செய்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டு,அவரின் சடலம் கால்வாயில் வீசப்பட்டது.

சந்தேகநபரிடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கொலைக்கான காரணம் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலை சம்பவம் கடந்த 2020ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின்போது, சந்தேக நபர் இந்த பெண்ணை பலமாக தாக்கி கொலை செய்துவிட்டு சடலத்தை வீட்டின் கழிவுநீர் கால்வாயில் போட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# பெரும்பாலான மக்கள் ராஜபக்ஷர்களின் பக்கம்!

## காரியவசம் சொல்கிறார்




கொழும்பு, மே 11

நாட்டின் 9 ஆவது ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்யும் நபரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம். பெரும்பாலான ம்க்கள் ராஜபக்ஷர்களுடனே உள்ளார்கள் - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமைப் பணிமனையில் பிரசார பணிமனை திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதன்பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே சாகர காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலுக்கு அச்சமடைய வேண்டிய தேவை எமக்கு கிடையாது. ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று (நேற்றுமுன்தினம்) அறிவிப்பு விடுத்தது.

தேர்தல் பிரசார கண்காணிப்பு பணிமனையை நாங்கள் இன்று (நேற்று) திறந்து வைத்துள்ளோம். ராஜபக்ஷர்கள் மக்கள் மத்தியில் செல்வதற்கு அச்சமடைய வேண்டிய தேவையில்லை. சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு பலர் கோரிக்கை விடுத்துள்ளார்கள். பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் செல்வாக்கு இல்லை என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள்.

ஆனால், பெரும்பாலான மக்கள் ராஜபக்ஷர்கள் பக்கமே உள்ளார்கள். நாட்டின் ஒருமைப்பாடு, தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்தியே பொதுஜன பெரமுன செயல்படுகிறது என்பதை பெரும்பான்மையின மக்கள் அறிவார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் ஏதும் கிடையாது. அரசியல் கொள்கையில் மாத்திரமே மாறுப்பட்ட தன்மை காணப்படுகிறது. ஜனாதிபதி தேர்தல் குறித்து அவரிடம் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். அத்துடன் கட்சி மட்டத்திலும் பேச்சில் ஈடுபட்டுள்ளோம்.

இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்யும் நபரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம். பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சென்றவர்கள் இறுதித் தருணத்தில் எம்முடன் ஒன்றிணைவார்கள் - என்றார். (ஐ)

# வர்த்தக பிரிவு பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனத்தில் அநீதி!

## சபையில் சுட்டிக்காட்டிய சஜித்

கொழும்பு, மே 11

**மேல் மாகாண ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் வர்த்தகப் பிரிவு பட்டதாரிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மேல் மாகாண ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நியமனம் வழங்கப்பட்டு வருகிறது. 6000 வெற்றிடங்களில் 2951 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றாலும் வர்த்தகப் பிரிவுப் பட்டதாரிகளில் 1200 பேர் விண்ணப்பித்திருந்த போதிலும் ஒரு வர்த்தக பட்டதாரிக்கேனும் இது வரை நியமனம் கிடைக்கவில்லை.

இது தொடர்பில் அவதானம் செலுத்தி அவர்களுக்கும் நியாயம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (எ)

# இணுவில் மக்லியோட் மருத்துவமனையில் மகப்பேற்று விடுதி திறந்துவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மே 11

126 வருடங்கள் பழமை வாய்ந்த இணுவில் மக்லியோட் மருத்துவமனையில் புகழ்பெற்ற மகப்பேற்று மருத்துவர் கெங்கம்மா ஞாபகார்த்தமாக புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று, மருத்துவ ,சத்திர சிகிச்சை விடுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு சிறுவர்கள், குழந்தைகள் சத்திரசிகிச்சை நிபுணர் பா. சயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம அதிதியாக பங்கேற்று கட்டத்தைத் திறந்து வைத்தார்.



அவருடன், தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பத்மதயாளன், சத்திரசிகிச்சை பேராசிரியர் மருத்துவ நிபுணர் எஸ். ரவிராஜ், மகப்பேற்று மருத்துவர்களான ஜெ. கஜேந்திரன், என். சரவணபவ, வை. சிவாகரன், ஆர். துவாரதீபன் மற்றும் இலங்கை நிர்வாக சேவையின் உயரதிகாரி பொ. பிறேமினியும் பங்கேற்றனர்.

இந்த விடுதி கட்டடத் தொகுதி மருத்துவ நிபுணர் சயந்தன், அவரின் பாரியார் கிருபாலினி ஆகியோரின் நிதியில் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நீதிமன்ற தடை உத்தரவுக்கு எதிராக மைத்திரிபால மேன்முறையீடு தாக்கல்!

கொழும்பு, மே 11

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திர கட்சியின் தலைவராக செயல்படுவதற்கு தடை விதிக்கப்பட்டமைக்கு எதிராக மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயல்படுவதைத் தடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் பிறப்பித்த இடைக்கால உத்தரவை கலைப்பதற்கான தீர்மானத்தை மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளார்.

சட்டத்தரணி ஜயமுதிதா ஜயசூரிய ஊடாக தாக்கல் செய்யப்பட்ட இந்த மேன்முறையீட்டு மனுவில் பிரதிவாதியாக சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயல்குழு உறுப்பினர் மொண்டகு சரத்சந்திர குறிப்பிடப்பட்டுள்ளார்.

பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம், தாம் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயல்படுவதைத் தடுத்து இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளதாக மைத்திரிபால சிறிசேன தனது மேன்முறையீட்டு மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ள விதம் சட்டத்துக்கு முரணானது எனவும் அதனை நீக்குவதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறும் மைத்திரிபால சிறிசேனவின் மனுவில் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 9 பாதாள உலகக்குழுவினர் கைது

கொழும்பு, மே 11

பாதாள உலக செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட 20 குழுவினர் நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாதாள உலக குழுக்களை சேர்ந்த 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது பாதாள உலக குழுக்களுடன் தொடர்புகளை பேணினர் என்று கூறப்படும் மேலும் 12 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் வட பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பேலிய கொடை மற்றும் கொட்டுமுல்லை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30, 36 மற்றும் 33 வயதுடைய மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வெலிகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொழும்பு 12, கொழும்பு 15 மற்றும் அங்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 42, 44, 42, 24 மற்றும் 49 வயதுடைய ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலக குற்றக் குழுக்களைச் சேர்ந்த 948 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org